04.03.2025 அ.வ. எண். 277/2020 வா.சா.1 பெருமாள்

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து வந்த விவரம் எனக்கும் தெரியும், என் தகப்பனாருக்கும் தெரியும். 40 சென்ட் நிலத்திற்கு கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் சித்தப்பாவிடமிருந்து வாங்கியதாகும். வா.சா.ஆ.16 என் சித்தப்பாவிடமிருந்து கிரயம் வாங்கிய கிரய ஆவணமாகும். கோவிந்தசாமி சொத்தையும் சேர்த்து கிரயம் செய்வதாக குறிப்பிட்டுள்ளார். 20 சென்ட்டிற்கு தான் கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாக்கி 20 சென்ட் பூர்வீக சொத்தாகும். என் தாத்தா படியப்ப முதலியார் அவருடைய தகப்பனார் அருணகிரி முதலியார் அந்த வகையில் வந்தது தான் தாவா சொத்தாகும். அருணகிரி முதலியார் பெயரில் சொத்து இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை, பூர்வீக சொத்தாகும். தாவா சொத்து படியப்ப முதலியாருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என கூறுவது தவறு என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியும் தண்டபானி என்பவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தண்டபனியின் மனைவி, 4,5 பிரதிவாதிகள் தண்டபானியின் குழந்தைகள் என்றால் சரிதான். தண்டபானி 2ம் பிரதிவாதி காசிநாதன் பெற்றோர்கள் பெயர் உமயவள்ளி, துரைசாமி என்றால் உமையவள்ளியை தெரியும் அவர் கணவரை தெரியாது. தாவா சொத்து படியப்ப முதலியார், சடகோபன், முனியப்பன் (எ) முனியனின் பூர்வீக சொத்து என்றால் தவறு. படியப்ப முதலியாருக்கு தென்பாகம் 20 சென்டும், வடபாகத்தில் சடகோபன் மற்றும் முனியப்பன் (எ) முனியனுக்கு தலா 10 சென்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. படியப்ப முதலியார், சடகோபன், முனியப்பன் (எ) முனியன் ஆகியோர்கள் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்ததால் மூத்தவர் என்பதால் படியப்ப முதலியார் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் என் தாத்தா மட்டும் தான், அவருடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. அருணகிரி முதலியார் இறப்பு சான்று, வாரிசு சான்று என்னிடம் இல்லை. அருணகிரி முதலியார் வாரிசு சான்றை பார்த்தால் தான் அவர் வாரிசு யார் என்று தெரியவரும். அருணகிரி முதலியார் வாரிசு சான்றை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால்

வழக்கறிஞரிடம் ஆலோசித்துவிட்டு தாக்கல் செய்கிறேன். படியப்ப முதலியார் 5 ஏக்கர் நிலத்தையும் 2 மனைகளையும் விட்டுவிட்டு இறந்துவிட்டார். என் தகப்பனாரும், ஆறுமுகமும் குடும்ப சொத்துக்களை பாகம் செய்துகொண்டார்களா என்றால் என் தகப்பனார் பெரியவர் பாகம் செய்யும்போதே என் சித்தப்பா சொத்தை கொடுப்பதாக சொன்னார், அதனால் கிரயம் செய்துகொண்டோம். தாவா சொத்தில் 20 சென்ட் நிலம் என் சித்தப்பாவிற்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும் என் தகப்பனாருக்கு 20 சென்ட் பாகமாக ஒதுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட 20 சென்ட் நிலத்தை தான் வா.சா.ஆ.16ன் மூலம் நாங்கள் கிரயம் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. படியப்ப முதலியார் சகோதரர் முனியப்பனுக்கு ஒதுக்கப்பட்ட 10 சென்ட் நிலத்தை அவருடைய மகன்களான குப்புசாமியும், துரைசாமியும் தலா 5 சென்ட் என பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் இல்லை அது தவறு. நான் 1975 ஆம் ஆண்டு பிறந்தேன். துரைசாமிக்கு ஒதுக்கப்பட்ட 5 சென்ட் நிலத்தை அவருடைய தம்பி மனைவி சிந்தாமணிக்கு 07.02.1927 ஆம் தேதியே கிரயம் செய்து கொடுத்து விட்டார் என்றால் அது தவறு. குப்புசாமி, சிந்தாமணி ஆகியோர்கள் 10 சென்ட் நிலத்தை அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. குப்புசாமி, சடகோபனுக்கு பாத்தியப்பட்ட 20 சென்ட் நிலத்தை 27.02.1933ம் தேதி உமையவள்ளியின் மாமனார் சோனாசல முதலியாருக்கு அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு. குப்புசாமி, சிந்தாமணி ஆகியோர்கள் இறந்தபிறகு அவர்களுக்கு பாத்தியப்பட்ட 10 சென்ட் நிலத்தை அவர்களின் வாரிசுகளான நடேசன், அண்ணாமலை, நடராஜன், சுப்பிரமணி ஆகியோர்கள் அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் தவறு. சடகோபன், முனியன் (எ) முனியப்பனை எனக்கு தெரியாது. குப்புசாமி, சிந்தாமணி ஆகியோர்களின் வாரிசுகளில் நடேசன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றும் அண்ணாமலை, நடராஜன், சுப்பிரமணி ஆகியோர்கள் பிரித்துக்கொண்டார்கள் என்றால் இல்லை. மேற்சொன்ன நடராஜன், சுப்பிரமணி ஆகியோர்கள் இறந்தபிறகு

அவர்களின் வாரிசுகளிடமிருந்து 3ம் பிரதிவாதியின் கணவர் தண்டபானி 6.5 சென்ட் நிலத்தை கிரயம் வாங்கினார் என்று சொன்னால் அந்த சொத்திற்கும் அவர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மேற்சொன்ன அண்ணாமலை இறந்தபிறகு அவரின் வாரிசுகளிடமிருந்து பாக்கி 3.5 சென்ட் நிலத்தை 3ம் பிரதிவாதியின் கணவர் தண்டபானி கிரயம் வாங்கினார் என்றால் அந்த சொத்திற்கும் அவர்களுக்கும் சம்மந்தமில்லை. உறவினர்கள் என்பதால் பத்திர பேப்பரில் எழுதினார்கள் என்றும் பின்னிட்டு பதிவு செய்யவில்லை என்றும் ஆனால் அந்த சொத்தை தண்டபானியின் வாரிசுகளான 3,4,5 பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. பணம் முழுவதும் தண்டபானி செலுத்திவிட்டதால் அண்ணாமலை, நடராஜன், சுப்பிரமணி ஆகியோர்களின் வாரிசுகள் 3,4,5 பிரதிவாதிகள் அனுபவித்து வருவதை தடுக்கவில்லை என்று சொன்னால் தவறு. முனியப்பன் வாரிசுகளிடமிருந்து தண்டபானி தாவா சொத்தில் 10 சென்ட் நிலத்தை கிரயம் பெற்று அனுபவித்து வருவதால் 10 சென்ட் நிலம் 3,4,5 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. சடகோபனுக்கு பாத்தியப்பட்ட 10 சென்ட் நிலத்தை சடகோபன் வாரிசுகளான கந்தசாமி, சுப்பிரமணியிடமிருந்து 3ம் பிரதிவாதியின் மாமியார் உமயவள்ளி கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்று சொன்னால் இல்லை. தாவா சொத்தில் 20 சென்ட் நிலம் 3,4,5 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் என்றால் எங்களின் பூர்வீக சொத்து. வடபாகத்தை தான் 3,4,5 பிரதிவாதிகள் அனபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை முழு சொத்தையும் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். 3ம் பிரதிவாதியின் கணவர் தண்டபானியின் பூர்வீகம் சொரையூர். 3ம் பிரதிவாதியின் கணவர் தண்டபானி, உமையவள்ளி ஆகியோர்களின் பூர்வீகம் விளாரிப்பட்டு கிராமம் என்று சொன்னால் அவர்களின் பூர்வீகம் கிடையாது வந்து செட்டில் ஆனவர்கள் தான். 3ம் பிரதிவாதியின் கணவர் தண்டபானி, உமையவள்ளி ஆகியோர்களின் பூர்வீகம் விளாரிப்பட்டு கிராமம் என்றும் நான் வேண்டுமென்றே அவர்களின் பூர்வீகம் சொரையூர் என்று தவறாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. படியப்ப முதலியார் பெயரில் பட்டா இல்லை, கோவிந்தசாமி முதலியார் பெயரில் தான் பட்டா. 1971 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை கோவிந்தசாமி முதலியார் பெயரில் பட்டா இருந்தது. அதன்பிறகு இல்லை நிலவுடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் மாறிவிட்டது. 1985 ஆம் ஆண்டு முதல் பட்டா, சிட்டா, அடங்கல் எங்கள் பெயரில் இல்லை, முறையிட்டோம் மாறுதல் செய்யவில்லை. அந்த சொத்து முழுவதும் எங்களுக்கு சொந்தமானது இல்லை என்பதால் தான் எங்கள் பெயரில் மாறுதல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 நாங்கள் அனுப்பியது தான். பொதுவில் 40 சென்டில் பொதுவில் பாதி என தட்டச்சு செய்யப்பட்டு அடிக்கப்பட்டு 40 சென்ட் என எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2ல் 09.01.1973 தேதிய கிரய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்று தான் குறிப்பிட்டுள்ளோம் என்றும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என சொல்லவில்லை என்று சொன்னால் பூர்வீகமாக பாத்தியப்பட்டது தான். பூர்வீகமாக பாத்தியப்பட்டது என வா.சா.ஆ.2ல் சொல்லவில்லை என்றும் 20 சென்ட் நிலத்தை அபகரிப்பதற்காக பூர்வீகமாக பாத்தியப்பட்டது என வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறு. குடும்பத்தில் மூத்தவர் பெயரில் தான் பட்டா ஏற்படும் என்றும் அவ்வாறு கோவிந்தசாமி மூத்தவர் என்பதால் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் பட்டா ஏற்பட்டது. அந்த சொத்தில் அவருக்கு மட்டும் பாத்தியமில்லை என்றும் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் பாத்தியம் என்று சொன்னால் எங்களுக்கு தான் பாத்தியப்பட்டது. தண்டபாணி, உமையவள்ளி கிரயம் பெற்ற கிரய ஆவணங்கள் குறித்து என் தகப்பனார் ஆட்சேபனை செய்தாரா என்றால் என் தகப்பனாருக்கு தெரியாது. பிரதிவாதிகள் குடும்பத்திற்கு 20 சென்ட் நிலம் சொந்தம் என்பதால் தான் என் தகப்பனார் எந்த ஆட்சேபனையும் செய்யாமல் இருந்துவந்தார் என்றும் அவ்வாறு இல்லை என்றால் என் தகப்பனாரே வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. நிலவுடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் கன்னியம்மாள் பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். பொதுவாக பட்டாவை யாரும் பெரியதாக

எடுத்துக்கொள்ளாமல் சொத்தை அனுபவித்து வருவார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வகையில் பிரதிவாதிகள் குடும்பத்தினர் 20 செண்ட் நிலத்திற்கான பட்டா வேறு நபர் பெயரில் இருந்ததை தெரியாமல் இருந்துவிட்டார்கள் என்றால் தவறு. 3 முதல் 5 பிரதிவாதிகள் பட்டா மாறுதல் செய்தது சம்மந்தமாக வட்டாட்சியரிடம் மனு அளித்து கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். கன்னியம்மாள் அவருடைய பிள்ளைகள் கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் அளித்தார்கள் அதற்கு முன்பாகவே கிராம நிர்வாக அலுவலர் என்னையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். கிராம நிர்வாக அலுவலர் என்னை விசாரித்த தேதியில் தான் 3,4,5 பிரதிவாதிகளையும் விசாரித்தார் என்றால் இல்லை, என்னை விசாரித்தார், கன்னியம்மாளை விசாரித்தார். 22.08.2019 ஆம் தேதி விசாரித்தார். கன்னியம்மாள் தண்டபானி பெயரில் கூட்டுப்பட்டா வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என வாக்குமூலம் அளித்துள்ளார். 3 முதல் 5 பிரதிவாதிகள் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் 1ம் பிரதிவாதி தெரிந்து தான் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு நிறைய நிலம் உள்ளது. 3,4,5 பிரதிவாதிகள் பெயரில் பட்டாவில் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் தவறாக சேர்த்துள்ளார்கள். அதன்பிறகு என் செல்வாக்கை பயன்படுத்தி 07.10.2020 ஆம் தேதி கன்னியம்மாள் பெயருக்கே பட்டா மாறுதல் செய்துவிட்டேன் என்று சொன்னால் கன்னியம்மாள் பெயரிலேயே பட்டாவை வைக்குமாறும் 3,4,5 பிரதிவாதிகள் பெயரில் ஏன் சேர்த்தீர்கள் என்று சொன்னேன். நான் வா.சா.ஆ.16ன் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதற்கு முன்பாகவே தண்டபானி, உமையவள்ளி 1927, 1933, 1953 ஆண்டுகளில் 20 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் தவறு. மேற்சொன்ன கிரய ஆவணங்கள், அடமான ஆவணம் வா.சா.ஆ.16க்கு முந்தைய ஆவணம் என்றும் அதனால் 20 செண்ட் நிலத்தில் எங்களுக்கு பாத்தியமில்லை என்று சொன்னால் சரியல்ல. தவறான பட்டா மாறுதல் அடிப்படையில் 40 செண்ட் நிலத்தில் உரிமையில்லாமல் வழக்கு

தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பட்டாவின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டா, சிட்டா, அடங்கல் கணக்கு எங்கள் பெயரில் இல்லை என்றும் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் கோவிந்தசாமி பெயரில் தான் பட்டா, சிட்டா, அடங்கல் கணக்கு இருந்தது என்றும் அதைதான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7, 10 ஆவணங்களில் உள்ள தரப்பினர்களையோ அவர்களின் வாரிசுகளையோ இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாததால் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.7, 10 ஆவணங்களில் உள்ள தரப்பினர்கள் அவர்களின் வாரிசுகள் எங்கு இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமென்றும் வேண்டுமென்றே அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணை உறுதிக்கூற்றில் பிரதிவாதிகளுக்கு எதிராக கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றும் எங்களுக்கு தாவா சொத்தில் 20 சென்ட் தான் பாத்தியம் என்றும் சொன்னால் சரியல்ல. படியப்ப முதலியார் மனைவி பெயர் ஜெகதாம்பாள். என் தாத்தாவை படியப்ப முதலியார் என்றும் உடையார் என்றும் அழைப்பார்கள். பிரதிவாதிகள் மோசடியாக கூட்டுப்பட்டா பெற்றதாக தவறாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. உறவுமுறைகளை மறுத்தும், வம்சாவழி பட்டியல் தவறு என்று பதில் வழக்குரையில் (Reply Statement) தவறாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. பதில் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என் தகப்பனாருக்கு 20 சென்ட் பாத்தியம் என்றும் என் சித்தப்பா ஆறுமுகத்திற்கு 20 சென்ட் பாத்தியம் என்றும் சொல்வது தவறு என்றும் என் தகப்பனாருக்கு 20 சென்ட் பாத்தியமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வருவாய் துறையினர் சரியாக விசாரணை செய்து 3,4,5 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறுதல் செய்து என் செல்வாக்கை பயன்படுத்தி அதை ரத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என் சித்தப்பா ஆறுமுகம் தாவா சொத்தில் 10 செண்ட் நிலத்தை 23.09.1959 ஆம் தேதி அனக்காவூர் கூட்டுறவு விவசாய வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றும் அதனால் எங்கள் குடும்பத்திற்கு 40 செண்ட் நிலம் பாத்தியம் என்று கூறுவது தவறு என்றும் ஆறுமுகத்திற்கு 10 செண்ட்டும், என் தகப்பனாருக்கு 10 செண்ட்டும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உரிமைமூலத்தை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு அவசியமான தரப்பினர்களை தரப்பினர்களாக சேர்க்காததால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.